1986 நவம்பர் 18]

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் என்பது இந்த அரசினுடைய உயிர்நாடித் திட்டமாக இருந்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தில் பல இடங்களில் குறிப்பாக என் தொகுதியில் கூட காலியாக உள்ள சத்துணவு ஆசிரியர்கள் அல்லது அமைப்பாளர்கள் பதவிகள், ஒரு காலகட்டத்திற்குள் நிரப்பப்பட வேண்டும் என்ற ஒரு திட்டவட்டமான முடிவை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களுக்குத் தேவையான பணியாளர்களை பத்திரிகையில் விளம்பரம் செய்து, அவர்களிடத்திலிருந்து உரிய விண்ணப்பங்கள் வரப் பெற்றவுடன், நேர்முகத்தேர்வின் மூலமாகத்தேர்ந்து எடுக்கப்படுகின்றனர். ஆகவே, கணிசமான அளவுக்குத் தேவை என்ற நிலையில், முறையாக எடுக்கப்படுகிறது. உடனடியாக தேவைப் படுகிற சத்துணவுக் கூடங்களில், பக்கத்திலே இருக்கின்ற சத்துணவுக் கூடத்தில் வேலை புரிபவர்கள் கூடுதல் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். தேவைப்படுகிற காலங்களில், சில இடங்களில் சில பேர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. பரப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு கேள்வி நேரத்தில் கூடாது. அது நீக்கப்படுகிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில் கதர்வாரிய கைத்தொழில்கள்

63—(*வினா எண். 9077)—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கதர் வாரியத்தால் மேற்கொண்டுள்ள கைத்தொழில் பணிகள் யாவை?

(ஆ) அதன் மூலம் பயனடைவோர் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக 56 அலகுகளும், சங்கங்களின் மூலமாக 59 அலகுகளும், தனி நபர் மூலமாக 3255 அலகுகளும் செயல்பட்டு வருகின்றன. அதன் மூலமாக 16,859 நபர்கள் வாய்ப்பும், பயனும் அடைந்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. துரை அன்பரசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் வாரியத்தின் மூலமாக தொழில் தொடங்கி நடத்தி வருகிற நேரத்தில் அதன் மூலம் நட்டம் வருகிறது என்ற காரணத்தால் சில நிறுவனங்கள் மூடப்பட்டு இருக்கின்றன. அப்படி மூடப்பட்ட நிறுவனங்கள் எத்தனை? அதனால் வேலை இழந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல்—10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி நஷ்டமடைந்து மூடப் பட்டதாக அரசுக்கு எந்தத் தகவலும் வரவில்லை. ஆதாரம் ஏதாவதுஇருந்து உறுப்பினர் அதனைத்தருவார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரை அன்பரசன் : தலைவர் அவர்களே, அதேபோல் தென்னாற்காடு மாவட்டத்தில் நிறைய நிலையங்கள் மூடப் பட்டிருப்பதாக எனக்கு செய்தி வந்திருக்கிறது. அதனால் ஏராள மான பேர்கள் வேலை இழந்திருக்கிறார்கள் என்பதும் தெரி கிறது. அதை எழுத்து மூலமாகக் கூட கொடுக்கிறேன். அப்படித் தருகிறபோது அவர்களுக்கு மாற்றுப்பணி ஏற்படுத்தித் தரமாண்பு மிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெரிந்திருக்கிறது, செய்தி வந்திருக்கிறது என்பதை வைத்துமட்டும் குறிப்பிட்ட ஒருபதிலைச் சொல்லி விட முடியாது. குறிப்பாக ஏதாவது ஆதாரத்தை காட்டுவார்களானால் அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற் கொள்ளும்.

ஆற்காடு வட்டத்தில் கதர்த்துறை மூலம் காகிதம் தயாரித்தல்

64—(*வினா எண். 9115) திரு. த. பழனி : மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு வட்டத்தில் கதர்த்துறை மூலமாக காகிதம் தயா ரிக்கப்படும் அலகு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?